# தமிழ்ச்சிட்டு


தனித்தமிழ்
சிறுவர்
திங்கள் இதழ்

## தமிழ்த்தாய் வாழ்த்து!

அன்னை மொழியே!
அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை
முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக்
கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த
மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே!
திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே!
எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே!
மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால்
முடிதாழ வாழ்த்துவமே!

சிந்தா மணிச்சுடரே!
செங்கைச் செறிவளையே!
தந்த வடமொழிக்கும்
தாயாகி நின்றவளே!
சிந்து மணற்பரப்பில்
சிற்றில் விளையாடி
முந்தை எகுபதியர்
முத்த சுமேரியத்தார்
செந்திரு நாவில்
சிரித்த இளங்கன்னீ!
சிந்துங் கலைவடிவே!
சீர்த்த கடற்கோளில்
நந்தாக் கதிரொளியே!
நாடகத்துப் பண்ணியலே!
வந்த குடிமரபோர்
வாழ்த்தி வணங்குவமே!

குரல்: 4.
இசை: 2, 3



விலை
25காசு

# போலியரைக் கண்டுகொள் தம்பி!

போலிகள் வாழ்கின்ற காலமிது–தம்பி
புன்மை செறிந்துள்ள காலமிது!
பாலிலும் பாகிலும் வெண்ணெயிலும்–சரி
பாதிக் கலப்புள்ள காலமிது!

திருடரே நல்லவர் போல்நடிப்பார்!–கொடுந்
தீயவர் ஊமையர் போன்றிருப்பார்!
உருவிலும் பேச்சிலும் அன்னவரைக்–கண்டே
உள்ளந் தெளிதல் மிகக்கடினம்!

பார்க்கத் துறவியைப் போலிருப்பார்–உள்ளப்
பான்மையில் கீழ்மையின் காலிருப்பார்;
யாருக்கும் மேல்எனப் பேசிடுவார்–ஆனால்
யாவர்க்கும் முன்வரக் கூசிடுவார்.

உள்ளம் பரந்து, விரிந்ததென்பார்–சிறு
ஓட்டை கண் டாலதைக் கோட்டையென்பார்!
கள்ள நினைவினர்! நல்விளைவை என்றும்
கண்டு பொறுத மனத்தினரே!

திருக்குறட் பாக்கள் முழக்கிடுவார்–நன்மை
தீமைகள் ஆய்ந்து வழக்கிடுவார்!
செருக்குற யாங்களே மெய்யர்என்பார்–பொருள்
சேர்ப்பதி லேவிழிப் பாயிருப்பார்!

பொன்மணி பகட்டுடை தாமணிவார்–ஒரு
பூழ்க்கையும் பிறர்க்கிட வேட்கை கொளார்!
மின்மினி போன்ற ஒளியுடையார்–உயர்
மெய்யறி வேமெனும் வெளிறுடையார்!

கடமையில் தாழோம்யாம் என்றுரைப்பார்–நடுக்
கடலில் மிதக்கையில் கைநெரிப்பார்!
உடைமை யெலாம்பொது வேண்டுமென்பார்–ஓர்
ஓட்டைப் பொருளையும் வீட்டடைப்பார்!

வாய்மையர் யாமென நம்பவைப்பார்–பல
வாழ்க்கை நிகழ்ச்சிகள் தாமறைப்பார்!
தூய்மையர் போலப் பிதற்றிடுவார்–அவர்
தோதுகள் கண்டுளந் தெளிக தம்பி!

துரை-மாணிக்கம்.



# தமிழ்ச்சிட்டு

## தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

இன்றைய பயிரே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-4 | தி.பி. ௨௦௦௦-கன்னி, துலாம்-செப்-அக்-நவ 69 | இசை-2,3.

# எச்சரிக்கையாயிரு தம்பி!

எவர் பேச்சைக் கேட்பது?
எவர் நூலைப் படிப்பது?
எச்சரிக்கை யாயிரு தம்பி!—குட்டிச்
சுவராக உனையாக்கும்
நூலுண்டு; பேச்சுண்டு
தெளிய வேண்டும் நீகண்டு!

கைக்குக் கிடைப்பன
எலாம்படிக் காதே!
காலத்தை வீணடிக் காதே!—தம்பி
பொய்க்கும் புரட்டுக்கும்
பளபளப் புண்டு; நீ
புரிய வேண்டும் அதைக்கண்டு!

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர் 1.

பாலுக்கும் வெண்மை!
பழங்கள்ளும் வெண்மை!
பார்வையில் புரியாதோ உண்மை!—தம்பி
மேலுக்கு நல்லவரைப்
போன்றோர் மிகவிருப்பார்!
மெச்சினால் கழுத்தையே அறுப்பார்!

இனிப்புள்ள சொற்களை
எவர்பேசி னாலும்
தனிப்புளு கென்றுநீ தள்ளு!—தம்பி
பனிக்கட்டி குளிர்ச்சியே!
பருகினால் மிகு சூடு!
பயன்என்ன என்பதையே தேடு!

நேருக்கு நேர்நின்று
சுடச்சுடச் சொல்லுஞ்சொல்
தேருக்கு அச்சாணிபோல-வாழ்க்கைப்
போருக்குக் கேடயமாகும்!
புகழ்ச்சிக்கு மயங்காதே!
புரிந்துகொள்! நீதயங்காதே!

கண்ணுக்குப் புறஞ்சொல்வான்
கழுத்துக்குக் கருக்கரிவாள்!
களையவேண்டும் அவன்நட்பு—துன்பப்
புண்ணுக்கு மருந்திடுவான்
பொய்மைக்கா விருந்திடுவான்?
புன்னகையால் பிறகுவருந்திடுவாய்!

ஏழ்மைக்குத் துணைநிற்பான்;
இழிவுக்குக் காப்பிடுவான்;
தாழ்ச்சியில் புறம்போகான் நண்பன்—அவன்
தள்ளினும் விலகாதே!
தவிர்ப்பினும் பிரியாதே!
எள்ளினும் இகழ்ந்துதிரியாதே!

வைணவன்




காளைக் குரலும்
கழுதைகளின் வன்குரலின்
ஊளை இழுப்பும்
ஒடுங்கியதும் மூன்றுமாய்
ஊர்தாண்டி மேற்கே
ஒருகல் தொலைவுபோய்
நீர்நிரம்பி நின்றிருக்கும்
நீண்டதோர் ஏரியின்
பக்கத் திருக்குமொரு
பாழ்குடிலை வந்தடைந்த!
மிக்க இருள்போர்த்
திருந்ததனால் மேன்மேலும்
செல்ல விரும்பாமல்
சேர்ந்தொருங்கே ஒய்ந்திருந்த!
நல்ல பசிமிகுந்து
நாவறட்சி கொண்டதனால்,
காலையசை போட்டபடி
கண்ணயர்ந்து தூங்கியது!
கூளைக் கழுதையம்மை
குட்டிமுகத் தோடுமுகம்
சேர்த்தணைத்த வாறுய்ச்
சிறுதூக்கம் போட்டபடி
ஆர்த்தெழுந்த தீப்பசியால்
உள்ளம் அழன்றதுவே!

நள்ளிரவு! மூன்றுயிர்கள்!
நாடும் விடுதலைக்கே
துள்ளும் உளத்துடிப்பால்
துன்புற்று வாடினவே!

நம்பும் விடுதலைக்கே
நாட்டமுறும் வல்லுயிரை
வெம்பசிதான் என்செய்யும்?
வெந்துயர்தான் என்செய்யும்?
வல்லடிமை போக்கிவிட்டு
வாழ்வொரு திட்டமிட்டுச்
செல்லும் மறவோர்க்குச்
செருக்களமும் புல்தரையே!
ஆண்டாண்டுக் காலம்
அடிமைத் துயராலே
மாண்பொழியும் நல்லுயிர்க்கு
நல்லதிறம் வாய்த்துவிட்டால்,
துன்பவிருள் என்செய்யும்?
தொல்லைமிகை என்செய்யும்?
வன்பு மட்டேவோர் தம்
வல்வினை தான் என்செய்யும்?
வாட்டித் துளைத்தெடுக்கும்
வண்டினங்கள் மெய்குடையும்!
மூடியிருந்த
முழுவிருளில் மூன்றுயிர்கள்
கொல்பசியால் கல்லுறக்கம்
கொண்டிருக்கும் வேளையிலே
தொல்குடியின் வாயிலிலே
தோன்றியதோர் வன்கூட்டம்!
வந்திருந்த கூட்டத்தார்
வைத்திருந்த குண்டுகளும்
பந்த விளக்குகளும்
பார்க்கப் பளபளக்கும்
கத்திகளும், கன்னமிடு
கோலும், கயிறுகளும்

பாழ்குடிலின் உள்ளே
பதுக்கிவைக்கப் பட்டனவே!
ஆழ்துயிலிற் பட்டிருந்த
அவ்வுயிர்கள் மூன்றுமே
ஆளரவம் கேட்டவுடன்
அஞ்சி விழித்தனவே!
காளையோர் மூச்சொன்றும்
காட்டாமல் அங்கிருந்த
தாய்க்கழுதை யின்புறத்
தலையாட்டிக் கண்காட்டி –655
வாய்திறவா தாங்கிருக்க
வாகாய் உணர்த்தியது!
குட்டி குலைநடுங்கியது!
கொண்டதனின் தாய்வயிற்றோ(டு)
ஒட்டி ஒடுங்கியது!
ஓர்நாழி சென்றிருக்கும்!
வந்த திருடர் [illegible]!
வழிபறித்த செல்வமெல்லாம்
தந்தமக்குள் பங்கிட்டுத்தாம்
தாங்கொண்டு வந்திருந்த –660
உண்டிப் பொருளெல்லாம்
உண்டு, பழங்களை
மண்டியபின் ஓடி
மலைமேல் மறைந்தனரே!
எல்லோரும் சென்றபின்பு
காளை எழுந்துசென்று
"எல்லாரும் வாருங்கள்"
என்று குரல்கொடுக்கத்
தாய்க்கழுதை குட்டியொடு
தாவியங்குச் சென்றதுவாம்! –665
"வாய்ப்பை உணர்ந்தாயா?
வாருங்கள் உண்போம்நாம்"—
என்றே மகிழ்வாக
ஏறு உரைத்ததுவே!
மூன்றிலிலே மீந்தபொருள்
மூவருக்கும் போதியதாம்!

(தொடரும்)



# உலகம் சுற்றுவோம்

## செருமனி

இ. செயராமன்.

1. செருமனியின் மொத்த நிலப்பரப்பு:

அ) செருமன் கூட்டாட்சிக் குடியரசு (பெர்லின் நீங்கலாக)
2,48,000 ச. கி. மீ. (95,800 சதுர கற்கள்)
மக்கள்தொகை 564 இலக்கம்.

ஆ) சோவியத்து ஆளுகைக்கு உட்பட்ட பகுதி.
1,08,300 ச. கி. மீ. (41,900 சதுர கற்கள்)
மக்கள்தொகை 159 இலக்கம்.

இ) பெர்லின் பகுதி: (நான்கு ஆட்சிகளைக் கொண்டது)
882 ச. கி. மீ. (341 ச. கற்கள்)
மக்கள்தொகை 32,51,000.
இதில் 22 இலக்கம் பேர்கொண்ட 479 ச. கி. மீ. (185 சதுர கற்கள்) பரப்பளவுள்ள மேற்கு பெர்லினும் அடங்கும்.

ஈ) செருமன் கிழக்கு மாநிலங்கள்: (சோவியத்து ஆளுகைக்கு உட்பட்டது)
பரப்பளவு 1,14,300 ச. கி. மீ. (44,100 ச. கற்கள்)
மக்கள்தொகை 7,00,000.

2. இதன் மொத்த நிலப்பரப்பில்: உழவு, மேய்ச்சல், புல்வெளிகள் தோட்டங்கள் 57.1%; காடுகள், 28.9%; வீடுகள், சாலைகள். தொடர்வண்டிச்சாலைகள் 7.8%; ஏரிகள், குளங்கள், கரம்பு நிலங்கள் 6.2%.

3. கனிவளம்: நிலநெய், இயற்கைவளி, பழுப்புநிலக்கரி முதலியன ரூர் கெட்டிநிலக்கரி 65000 இலக்கம் கல்லெடை (டன்) என மதிப்பிடப்பட்டுள்ளது. (இது இன்றையபயன் படுத்தும் வகைப்படி 400 ஆண்டுகளுக்குப் போதுமானது.

4. பழங்குடி மக்கள்: வடக்கில்—கீழ்சாக்சானியர், ஃபிரீசியர்.
மேற்குப்பகுதியில்—ஃபிராங்குகள்.
தென்பகுதியில்—சுவாபியர், பவேரியர்.
நடுப்பகுதியில்— துரிங்கியர்.
கிழக்குப்பகுதியில்–மேற்கு பிரீசியர்,சைலேசி [யர்

5. 10 இலட்சம் மக்களுக்குமேல் உள்ள நகரங்கள்: 1. மேற்கு பெர் லின். 2. ஆம்பர்க். 3. மூனிக்

6. உலக மகிழுந்து செய்திறத்தில் செருமனிக் கூட்டாட்சிக் குடியர சின் பங்கு 13% ஆகும்.

7. பள்ளிகள்: (அ) தொடக்கச் சிறப்புப்பள்ளிகள் 31,480. இதில் படிக்கும் மாணவர்கள் 5,99,400 பேர்கள்.

(ஆ) இடைநிலைப்பள்ளிகள்; 1,230. இதில் படிக்கும் மாணவர்கள் 4,97,300 பேர்கள்.

(இ) இலக்கணப் பள்ளிகள்: 1698. இதில் படிக்கும் மாணவர்கள் 8,61,000 பேர்கள்.

(ஈ) வாழ்க்கைத் தொழில்பற்றிய பள்ளிகள்: 2,300. இதில் படிக்கும் மாணவர்கள் 16,99,000 பேர்கள்.

(உ) சிறப்புத் தொழிற்பயிற்சிப்பள்ளிகள்: 4923. இப்பள்ளியில் படிப்பவர்கள் 3,87,200 பேர்கள். இந்தப்பள்ளிகளில் பணியாற் றும் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 2,74,400.

8. பல்கலைக்கழகங்கள்:

அ) கலை, அறிவியல் ஆராய்ச்சிக்கு 19 பல்கலைக் கழகங்கள்.

ஆ) தொழில்நுட்பக் கல்லூரிகள் 9.

இ) பல்கலைக்கழகத் தகுதிபெற்ற அறிவியல் கல்லூரிகள் 7.

ஈ) உயர் தரக்கல்வி நிலையங்கள் 44.

உ) ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் 83

9. பொருட்காட்சிகள்: மூனிக், பெர்லின், டாலம் பகுதியில் உள் ளவை பெயர் பெற்றவை.

தனிச்சிறப்பு வாய்ந்தவை:

அ) செருமன் பொருட்காட்சி (மூனிக்கில் உள்ளது)

ஆ) செருமானிய தேசிய பொருட்காட்சி நூரம் பர்க்கில் உள் ளது)

இ) செங்கண்பர்க் இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி.

10. நூல்நிலையங்கள்: எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் மூனிக் மாநில நூல்நிலையம் 25 இலட்சம் நூல்களைக்கொண்டது. செருமனி நூல்நிலையம் 1945-இல் இருந்து செருமனிமொழியில் வெளியிடப்பட்ட எல்லா நூல்களும் உள்ளன.

11. பொது நூல் நிலையங்கள் 18,000.

11. செருமனியில் 9 வானொலி நிலையங்களும் 1,75,00,000 வானொலிப் பெட்டிகளும், 1,10,00,00 தொலைக்காட்சிப் பெட்டிகளும், 5,960 திரைப்படக் கொட்டகைகளும் உள்ளன. 1963-இல் 351 அயல் நாட்டுத் திரைப்படங்களும் 63 செருமனித் திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டன.

12. செருமனியில் உள்ள தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்கள்:
கூலி வாங்குபவர்கள் 79.04%
மாத ஊதியம் பெறுவோர் 11.9%
அரசினர் ஊதியம் பெறுவோர் 8.7%
மொத்தத் தொழில் செய்வோரின் எண்ணிக்கை 21 கோடிபேர்கள்

13. ஏற்றுமதி செய்யும் பொருள்கள்:
இரும்புப் பொருள்கள், துணிகள், ஆடைகள், நிலக்கரி, கல்கரி, மதிப்புள்ள (உயர்ந்த) மாழைகள், கடிகாரங்கள், கண்ணாடிப் பொருள்கள், இவற்றின் மதிப்பு (49.1 கோடி பவுன்கள்)
உலக ஏற்றுமதியில் 13.7% பங்கும்
உலக இறக்குமதியில் 12.9% பங்கும்.

14. ஆண்டுதோறும் ஏறக்குறைய 10,000 அயல்நாட்டினர் தொழில் துறையில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

15. விலங்குகள்: குதிரைகள் 6,34,000; ஆடுமாடுகள் 1,32,77,000; கறவை மாடுகள் 58,94,000; பன்றிகள் 1,72,07,000; கோழிகள் 6,92,67,000 (தோராய மதிப்பு)

16. விளைநிலப்பரப்பு: கோதுமை—12,100,000 குறுக்கம்.
உருளைக்கிழங்கு வகைகள்—1,75,58,000 குறுக்கம்.
விலங்கு உணவுப்பயிர்கள்—9,33,000.
பிற பயிர்கள்—2,94,000 குறுக்கம்.

17. தொடர்வண்டிப் போக்குவரத்து:
அரசுத் தொடர்வண்டிப் பாதையின் நீளம்-19114 கற்கள்.
தனியார் தொடர்வண்டிப்பாதையின் நீளம்-3282 கற்கள்.
மின் இணைப்புப் பெற்ற தொடர்வண்டிகளின் எண்ணிக்கை
[13.2%




## கேடில் விழுச்செல்வம்.

பாவை நடவரசன்.

மணிமார்பன் என்பான் மாமறவன்; மற்போர் புரிவதில் மாமல்லன்; வாளேந்திப் போர் புரிவதிலும் வல்லவன்; நாட்டுக்கு நலம் புரிவதில் நல்லவன். அவனை, சேரவரசன் தனக்குக் கிடைத்த பெருஞ் செல்வமென எண்ணி மகிழ்ந்தான்.

எந்நாட்டரசன் போர் தொடுத்தாலும் அந்நாட்டரசனை அடக்க-அவன் முடியை எடுக்க இந்த மணிமார்பன் தலைமையில்தான் தானை நடக்கும்; தான் நினைத்ததை முடிக்கும்.

வேற்று நாட்டரசன் ஒருவன் சேரநாட்டின்மீது பகைகொண்டு படையெடுத்தான். அதை அறிந்த சேரவேந்தன் ஆர்த்தெழுந்து நின்றானில்லை; சீற்றங்கொண்டு கூறினானில்லை; சீறி எழுந்து வரும் வரிப்புலியே என்றாலும் அதை அடக்கும் ஆற்றல் அவன் படைத் தலைவனுக்கு உண்டன்றோ! அதனால், மணிமார்பனுக்குப் போர் தொடுக்க ஆணை கொடுத்தான். போர்ப்படைகளும் அணிவகுத்து ஆர்த்தெழுந்தன; அரிமாக் குருளைகளெனப் பகைவர் படைமேல் பாய்ந்தன.

கடும் போர் மூண்டது; கண்ணுக்கெட்டிய தூரம் மறவர்கள் போர்புரியும் காட்சிதான்; ஆரவார ஒலிதான்; கத்தியோடு கத்தி ஒலித்தது; பரியோடு பரி மோதியது; கரியோடு கரி மோதியது. மறவர்கள் அஞ்சாது போர்புரிந்தனர். சிலர் நெஞ்சில் வாள்தாங்கி மாய்ந்தனர்; இன்னுஞ் சிலர் வேல்தாங்கிச் சாய்ந்தனர்; மற்றுஞ் சிலர் கால் துணிக்கப்பட்டு விழுந்தனர். இறக்கையுள்ள பறவைகள் போல் தேர்கள் இங்குமங்கும் பறந்தன. அப்படிப் பறந்து (ஓடி) வந்த தேர் ஒன்று, மணிமார்பனைத் தள்ளி, அவன் தலைமீது ஏறிப் பறந்தது. தேரின் சக்கரம் தலையில் ஏறியதால், தலை நைந்து போய்விட்டது. அவனால் ஒன்றினைப் பார்க்கவோ, கேட்கவோ, பேசவோ முடியாத நிலையடைந்தான்; சாகும் நிலையில் துடித்துக் கொண்டு கிடந்தான்.

இப் படைத்தலைவன் நிலைகேட்ட சேரவேந்தன் ஓடிவந்தான். வெற்றிபெற்ற செய்தியை எப்படி அவனிடம் சொல்வது என நினைத்தான். பகைவன் கோட்டைமீது பட்டொளி வீசிப் பறக்கும் விற்கொடியை அவனுக்குக் காட்டலாம் என்றாலோ, அவனுக்குக் கண் உடைந்து தலையோடு நைந்து போய்விட்டதே! வாயால் சொல்லலாம் என்றாலோ, அவன் காதும் தலையோடு கசங்கிக் கிடக்கிறதே! எப்படி அவனுக்கு வெற்றிச்செய்தியைச் சொல்வது?'' எனப் பலவாறு நினைத்தான்.

அண்மையில் நின்றிருந்த மறவனொருவன், 'அவருக்குப் படிக்கத் தெரியும்' என்றான்.

உடனே, சேரவேந்தன் அவனது மேலுடையைக் கிழித்துவிட்டு, அவன் மார்பில் தன் கையாலேயே வெற்றிச் செய்தியை எழுதினான்.

"ஏ மாமறவனே! என்றன் மணிமார்பனே! மாற்றான் கோட்டையில் நம் நாட்டுக்கொடி பறக்கிறது! நீ அணிவகுத்த முறையால் இன்றும் பெருவெற்றி பெற்றோம். உன்னால் வெற்றி பெற்றமையால் உன் பெயரினையே இந்த நாட்டிற்கு வைக்கின்றேன். ''மணிமார்பபுரம்'' என்று எழுதினானோ இல்லையோ, அவனது மேனியில் இருந்த முடி (மயிர்) எல்லாம் எழுந்து நின்றது. அவனின் தோளும் மார்பும் பூரித்து விம்மிப் புடைத்தன.

பேச முடியாமல்–கேட்க முடியாமல்–பார்க்க முடியாமல் சாகும் நிலையிலே ஒருவன் கிடந்தாலும், அவன் படித்திருப்பானேயானால், செய்திகளை உணரமுடியும், உணர்ந்து மகிழமுடியும். அதனால்தான் வள்ளுவப் பெருந்தகை "கேடில் விழுச் செல்வம் கல்வி'' என்றார். இதனை நன்கு உணர்ந்து ஒவ்வொருவரும் நன்றாய்ப் பிழையின்றிப் படிக்கவும் எழுதவும் தெரிந்து கொள்ளவேண்டும்.

---


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-1


(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

### மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

| | உள்நாடு. | வெளிநாடு, | கொழும்பு. |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 3-00 | 5–50 | 4-00 |
| தனியிதழ் ,, | 0–25 | 0–45 | 0-35 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!



# பெரியோர் கதை!

## உலக ஒன்றியத்தின் தலைவி
## (U. N. O.)
## திருமதி- ஆங்கி புரூக்சு.
## (Miss Angie Brooks)

**க. காந்தி.**

தமிழ்ச்சிட்டுகளே!

இதுவரை பெரியோர் கதைப் பகுதியில் செயற்கரிய செய்து புகழ்பெற்ற ஆடவர் பலரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தறிந் திருக்கின்றீர்கள். ஆனால் தங்களின் பேருழைப்பால் மேம்பட்டு ஆட வர்க்கு நிகராய் நிற்கும் பெருந்தகைப் பெண்டிரின் வாழ்க்கையைப் பற்றி அறிய உங்கட்கு வாய்ப்பில்லை. அக் குறையை நிறைவாக்கும் பொருட்டே இப் பெருந்தகைப் பெண்மணியின் வாழ்க்கைக் கதை வெளியாகின்றது.

கழகக் காலத்திலும், பாவியக் காலத்திலும் பெருந்தகைப் பெண் டிர் பலர் வாழ்ந்து சிறப்பித்தது நம் செந்தமிழ்நாடு. அவர்களில் தமிழ் முதாட்டி ஔவையார் முதல் கற்பின் செல்வி கண்ணகி ஈருகப் பலரைக் கூறலாம். ஆனால் இற்றைய தமிழகத்தை நோக்கின் பெருந் தகைப் பெண்டிரின் எண்ணிக்கை அருகி வருகின்றதோ என்ற எண் ணமே எஞ்சுகின்றது! பெண்டிர் சிறந்திருந்தால் அன்றோ வீடு சிறக் கும்! வீடு சிறந்தால் அன்றோ நந்தமிழ்நாடு சிறக்கும்!

மேல் நாடுகளில் எவ்வளவுதான் பண்பாடும், நாகரிகமும் முன் னேற்றமடைந்திருப்பதாகப் பறை சாற்றினும், அவர்கள் கறுப்பர் இனத்தை அடக்குவதும், ஒதுக்குவதும் அவர்கள் அடைந்திருப்பதா கக் கூறிக்கொள்ளும் முன்னேற்றத்தில் காணும் கறுப்புப் புள்ளி களே! அடக்கி, ஒடுக்கப்பட்ட இனமாக இருப்பினும், அடங்கிக் கிடக் காமல், வீறு கொண்டெழுந்து, வெற்றியுடன் முன்னேறி இன்று

உலக ஒன்றியத்தின் தலைவியாகப், பெண்குலத்தின் பொன் விளக்காக அமர்ந்திருக்கும் திருவாட்டி . ஆங்கி புருக்சு விடுதலைப் பண் இசைக்கும் ஆப்பிரிக்கக் கறுப்பு இனத்தின் விடுதலை மறத்தியன்றோ! 1969–70 ஆம் ஆண்டிற்குத் திருவாட்டி . ஆங்கி புருக்சைத் தலைவியாகத் தெரிந்தெடுத்ததனுல், அளவிடற்கரிய பெருமையைத் தன்னகத்தே உலக ஒன்றியம் தேக்கிக் கொண்டதன்றோ!

இன்று உலக ஒன்றியத்தின் தலைவியாக வீற்றிருக்கும் இவர் இற்றைக்கு ஏறத்தாழ 42 ஆண்டுகட்குமுன் நீக்ரோக்களின் நாடான இலைபீரியாவில், ஒரு மலைவாழ் இனத்தில் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் ஒன்பது பேர் ஆவர்: ஒன்றிரண்டு என்ருலே வறுமைதான் மிஞ்சும்; அதுவும் பசிப்பிணியும், வறுமைப் பிணியும், இனத்தாழ்வும் சேர்ந்த குடும்பத்தில் 9 குழந்தைகளும் இருந்தால் கூறவா வேண்டும் வறுமைக்கு! எனவே புருக்சின் பெற்ரேர் உணவுக்கும் உடைக்கும் திண்டாட நேர்ந்ததில் வியப்பேதும் இல்லையன்ரோ?! இந்நிலையில் ஒரு கைம்பெண்ணுன தையற்காரி புருக்சை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

தையற்காரியிடம் வளர்ந்த ஆங்கி புருக்சு, இருபதாம் அகவையடையும் முன்னரே மண வாழ்க்கையையும் ஏற்று, அதன் பயனுய் இரு குழந்தைகட்கும் தாயாகிப் பின், மணவிலக்கும் பெற்ருர்.

கணவனைப் பிரிந்த இவர் துன்பக் கடலில் மூழ்காமல் கல்விக் கடலில் மூழ்கத் தொடங்கினுர். அமெரிக்காவிற்குச் சென்று வடக்குக் கரோலினுவில் இராதேயிலுள்ள சா பல்கலைக் கழகத்தில் (Shaw University) கல்வி கற்ருர். பின்னர் இராசுகாசின் பல்கலைக் கழகத்திலும், 1952–53-ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக் கழகத்திலும் சட்டம் பயின்ருர். பல்கலைக் கழகத்தில் பயிலும்போது தம்முடைய செலவுகட்காகத் தட்டுகளைக் கழுவும் பெண்மணியாகவும், சலவைத் தொழிலாளியாகவும், நூலகத் துணையாளராகவும், துணைச் செவிலியாகவும் (Nurse) பணியாற்றி யிருக்கின்ருர் என்ருல் உங்கட்கு வியப்பாக இருக்கின்றதன்ரோ!

பல்கலைக் கழகத்திலிருந்து தலைசிறந்த வழக்குரைஞராக வெளிப்போந்த இவர்தம் வருவாயைப் பெருக்குவதோடு நில்லாமல், தம் இனத்தின் விடுதலைக்காகவும் விடுதலைப் பண்பாடத் தொடங்கினுர். இவருடைய அயரா உழைப்பின் பயனுகத்தான் இன்று உலக ஒன்றி

யத்தில் 38 ஆப்பிரிக்க நாடுகள் தனி நாடுகளாய்த் தலைநிமிர்ந்து நிற்கின்றன. பெண்ணுரிமைக்காகவும், நீகிரோக்களின் விடுதலைக்காக வும், ஆப்பிரிக்க மக்களின் எழுச்சிக்காகவும் அரும்பணி யாற்றிவரும் இவரை நோக்கிப் பல பெரும் பதவிகள் வருவதில் வியப்பேதுமில்லை யன்றோ?

இன்று இலைபீரிய நாட்டின் வெளிநாட்டுத் துணையமைச்சராக வும் உள்ளார். 1958-ஆம் ஆண்டில் இலைபீரிய நாட்டின் குடியரசுத் தலைவர் வெளிநாட்டுச் செலவு மேற்கொண்ட காலை, அந் நாட்டின் தலைமை மேலாளராகவும் (தலைமை நிர்வாகி) பணியாற்றியுள்ளார். 1954-ஆம் ஆண்டு முதல் உலக ஒன்றியத்தில் (ஐ. நா. வில்) இலை பீரியாவின் தூதராகவும் பணியாற்றி வருகின்றார்; இவர்தம் அறி வாற்றலாலும், செயலாற்றலாலும், உலக ஒன்றியத்தின் பெரும்பான் மையான உயர் மட்டக் குழுக்களில் இடம் பெற்றுள்ளார். 1966-ஆம் ஆண்டில் உலக ஒன்றியத்தின் அறங்காவல் குழுத் (Trusteeship Council) தலைவிபானுர். இந்நாள் ஆப்பிரிக்கா, மற்றும் பசிபிக் தீவுக் குடியேற்ற (காலனி) நாடுகளுக்கும் தலைமை தாங்கியுள்ளார்; இறுதி யாக உலக ஒன்றியத்தின் தலைவியாகவே இவர் தெரிந்தெடுக்கப்பட் டுள்ளார். உண்மையிலேயே பெண்குலத்தின் பொன் விளக்காகத் திக ழும் இவருக்கு அப் பதவி ஏற்றதுதானே!

உலக ஒன்றியத்தின் நடவடிக்கைகளில் இவர் முதிர்ந்த தேர்ச்சி பெற்றுள்ளார். போற்றுவார்களைப் புகழ்வதோ, இகழ்வார்களை எஃளு வதோ இன்றி, நடுநிலை நிற்கும் மனம் படைத்தவர். இவர் மேனுட்டில் பெயரும் புகழும் பெற்று, உலக ஒன்றியத்தின் தலைவியானுலும் மேனுட்டுப் பாணியில் ஆடை அணியாமல், தம் நாட்டுப் பாணியி லேயே தலைப்பாகை அணிந்து தம் இனத்தின் தனிப்பெருமையை நிலைநாட்டி வருகின்றூர். (இற்றை நாள் தமிழர்கள் உற்று நோக்கு வார்களாக!)

உலக ஒன்றியத்தின் தலைவியானதும், தம்முடைய முதற் சொற் பொழிவிலேயே உலக நாடுகளின் கவனத்தையும் கவர்ந்தவர் இவர்.

''வெறும் தீர்மானங்கள் மட்டும் இயற்றி விட்டால் போதுமா? அவற்றைச் செயலளவில் நிறைவேற்ற வேண்டாவா? போலித்தன மான, ஆரவாரத் தன்மையான பேச்சுகளும், புனிதமான தீர்மானங் களும், வீணுன நம்பிக்கைகளும் உ. ஒ. பெருமையை உயர்த்தும் என்று எண்ணுகின்றீர்களா? உறுதியாக உயர்த்தவே மாட்டா!'' என்ற இவரது முழக்கம் உலக அனைத்து நாடுகளின் கருத்தைக் கவர்ந்ததில் வியப்பேதுமில்லை யன்றோ! தமிழ்ச்சிட்டுகளே! நீங்களும் உங்கள் இனத்தை எண்ணிப்பாருங்கள். உழையுங்கள். தமிழ்க்கொடி நாட்டுங்கள். 0

# சொல்லும் செயலும்!

0 நீங்கள் என்ன சொன்னீர்கள், சொல்கின்றீர்கள், சொல்லப் போகின்றீர்கள் என்பவை பற்றிப் பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டா. என்ன செய்தீர்கள், என்ன செய்கின்றீர்கள், என்ன செய்யப்போகின்றீர்கள் என்பவை பற்றிப் பெருமைப்படுங்கள்.

0 நீங்கள் சொல்வதைப் பிறர் செய்யவேண்டும் என்று எண்ணு தீர்கள். நீங்கள் செய்வதைப் பிறர் சொல்லவேண்டும் என்று எண்ணுங்கள்.

0 ஒரு வாய் சொல்வதைப் பல உடல்கள் சேர்ந்து செய்தாலும் தீராது. எனவேதான் சொல்லைவிடச் செயல் கடினம் என்று சொல்லப்படுகின்றது.

0 ஒரு குழந்தையின் பேச்சைப் பெரியோர் பலராலும் செயலாக்க முடியாது.

0 பெரும்பாலும் பேச்சுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். நடந்தவை பற்றியவை; நடப்பதைப் பற்றியவை; நடக்க வேண்டியவை பற்றியவை. இவற்றில் பெரும்பாலோரின் பேச்சுகள் முதல் பிரிவில் அடங்குவன; சிலரின் பேச்சுகள் இரண்டாம் பிரிவில் அடங்கும்; மிகச் சிலரின் பேச்சுகளே மூன்றாம் பிரிவின.

0 நேற்று சொன்னவற்றுள் இன்று செய்தது போக எஞ்சியதைப் பற்றியே மக்கள் நாளை பேச முற்படுகின்றனர்.

0 வெறும் பேச்சுகளே கதைகள்; பாடல்கள்! பேச்சும் செயலும் கலந்தவை வரலாறுகள். தனிச் செயல்களே அறிவியல்.

0 எண்ணுமல் சொல்வது வேறு; எண்ணிச் சொல்வது வேறு. அவைபோலவே எண்ணுமல் செய்வதும் வேறு; எண்ணிச் செய்வதும் வேறு. வாழ்க்கை மரத்தில் எண்ணுமல் சொல்வன இலைகள் போன்றவை; எண்ணிச் சொல்வன மலர்கள் போன்றவை; எண்ணுமல் செய்வன பிஞ்சுகள் போன்றவை; எண்ணிச் செய்வன கனிகள் போன்றவை!

0 இந்த உலகின் முதல் தலைமுறையினர் எண்ணியதை அடுத்த தலைமுறையினர் பேசினர்; அடுத்த தலைமுறையினர் பேசியதை அதற்கடுத்த தலைமுறையினர் செய்தனர். எஞ்சியவற்றைச் செய்து முடிப்பதற்குள் ஒவ்வொரு தலைமுறையினரும் பேசிக்கொண்டே இருந்தனர். அவர்கள் எல்லாரும் பேசியதைச் செயல் படுத்தவே உலகம் பல தலைமுறையினரை மேலும் மேலும் ஈன்றுகொண்டே உள்ளது; பேசப்பெற்ற எல்லாப் பேச்சுகளும் செயலாக்கப்பெற்ற பின்னர்தான் இவ்வுலகம் செயலற்றுப் போகும்.

0 நாம் பேசும் பேச்சுகளில் 90 விழுக்காடு திரும்பத் திரும்பப் பேசப் பெற்றவைதாம்.

0 நீங்கள் ஒரு நாளில் பேசியதை உங்கள் வாழ்நாள் முழுவதும் முயன்றாலும் செய்ய முடியாது.

# முத்துமொழிகள்

0 உண்மையின் மீது தட்டுத்தடுமாறி மக்கள் எப்போதாவது விழுகிறார்கள். ஆனால் விழுந்த சுருக்கில் எழுந்துகொண்டு ஏதும் படாதது போல் உதறிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள்,

—சர்ச்சில்

0 துருப்பிடித்துச் சாவதைக் காட்டிலும் களைப்படைந்து சாகலாம்

—பிசப் கம்பர்லேண்ட்

0 சமயம் வரட்டும்; பல நற்செயல்களை ஒரேயடியாய்ச் செய்து விடலாம் என்று காத்திருப்பவன் எந்தச் சமயத்திலும் எதுவும் செய்ய மாட்டான்.

—சாமுவேல் சான்சன்

0 செருக்கு முன்னால் சென்றால் இகழ்ச்சி பின்னாலேயே வரும்.

—சார்சு சாப்மான்

0 மிதமிஞ்சிப் பேசுகிறவன் குறைவாகச் செய்கிறான்.

—சர்-ராலே.

0 கேட்டுத்தெரிந்து கொள்வது இழப்பும் இல்லை; இழிவும்இல்லை.

—செருமன் பழமொழி

0 குழந்தையை அடித்து வளர்க்காதவன் பின்னால் தன் நெஞ்சில் அடித்துக்கொள்வான்.

—துருக்கிப் பழமொழி

0 அறிவாளிகளை ஆவல் முட்டாள்களாக்கி விடுகிறது.

—இலாப்பர்

---

தொகுப்பு: து. பெரியசாமி, திருச்சி.




# திருக்குறள் தெரியுமா?

**1)** திருக்குறளில் 'தவறு' உண்டு; உங்களுக்குத் தெரியுமா? கீழே காணும் எண்களுக்குரிய குறட்பாக்களைப் படித்துப் பாருங்கள். தவறுகள் தெரியும்

குறள் எண்கள்; *469–1154 –1286–1321–1325.*

**2)** "செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்"—என்பது குறள் இல்லையா? ஆனால் சில குறட்பாக்களைப் படித்தாலே நமக்குப் பசி தெரிந்து விடும்.

கீழுள்ள குறட்பாக்களைப் படித்துப் பாருங்கள். பசி வருகிறதா இல்லையா என்று தெரிந்து கொள்வீர்கள்,

எண்: *13–225–236–227–656-734–944–837.*

**3)** திருவள்ளுவருக்குப் பொய்யாமொழிப் புலவர் என்ற ஒரு பெயரும் உண்டு என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் திருவள்ளுவர் பதினெட்டு இடங்களில் பொய் சொல்லி யிருக்கின்றார்.

அவை எந்தெந்தக் குறட்பாக்கள் தெரியுமா?
*6, 938, 1246, 293, 1287. 182, 183, 836,*
*13, 292, 913, 299, 753, 294,*
*296, 297, 323*—என்ற குறட்பாக்களை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

**4)** திருவள்ளுவர் எந்தத் தெய்வத்தையும் குறிப்பிட்டுக் கூற வில்லை என்பார்கள். ஆனால் அவர் ஆறு தெய்வங்களைக் கூறியுள்ளார்

*43, 50, 55, 119, 702, 1023* என்ற எண்களுள்ள குறட்பாக்களை எடுத்துப் பாருங்கள்.

**5)** திருவள்ளுவர் வினவுக்கு விடை கூறி யுள்ளார் என்பது உங்கட்குத் தெரியுமா?

அவ்வினக்களையும் அவர் விடைகளையும் கீழே உள்ள குறட்பாக்களில் பாருங்கள்.

*178, 254, 291, 321, 324, 789; 801, 831, 844, 986, 1041.*

---

புலவர்-பசும்பொற்கிழார்.

# குடையும் செருப்பும்

குடையும் செருப்பும் பேசின—பல
குறைகள் சொல்லி ஏசின.
நடையில் நடந்த நாடகம்!—இதை
நாமெல் லாரும் பாடுவோம்!

குடை: செத்த மாட்டின் உறுப்பே-தோல்
செருப்பே! உன்மேல் வெறுப்பே!

செருப்பு: முகத்தைப் பார்த்தால் கறுப்பே!-உடல்
முழுதும் கம்பி விரிப்பே!

குடை: காலில் கிடக்கும் எருமை!-உன்
கதையில் என்ன பெருமை!

செருப்பு: நெருப்பின் மீது நடப்பேன்-குத்தும்
நெருஞ்சி முள்ளில் படுப்பேன்!

குடை: நிழலே என்றும் கொடுப்பேன்-வந்து
நனைக்கும் மழையைத் தடுப்பேன்.

செருப்பு' காற்றால் உனக்கு நடுக்கம்-நல்ல
கடும் இருட்டில் ஒடுக்கம்!

குடை: நீரைக் கண்டு நெருங்கி-நீ
நனைவாய் உடலும் சுருங்கி!

செருப்பு: இரவும் பகலும் நண்பன்-யார்க்கும்
என்னால் இல்லை துன்பம்!

குடை: கையில் பிடித்து மதிப்பார்-உனைக்
காலில் போட்டு மிதிப்பார்!

செருப்பு: உனையும் நானே சுமப்பேன்-இதை
உணர்ந்து கொள் வாயே!

குடை: உனக்கும் நிழலைக் கொடுப்பேன்-இதை
உணர்ந்து கொள்வாய் நீயும்!

செருப்பு: மேலே நின்று காப்பாய்-கீழ்
மண்ணில் தங்கி காப்பேன்;

குடை: நமக்குள் எதற்குப் பகையே-இனி
நண்பராகிப் போவோம்!

---

துரை-மாணிக்கம்-

# எண்கள் பெயர்க் காரணங்கள்.

ஒன்று: ஒல்-ஒன்-ஒன்று. ஒல்லுதல்-பொருந்துதல்.

இரண்டு: ஈர்-இர்-இரண்டு. ஈர்தல்-ஒன்றை இரண்டாக அறுத்தல்

மூன்று: மூசு-முகு-மூறு-மூன்று. (மூக்கின் முப்பட்டையைக் காண்க)

நான்கு: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்-நாலிலங்கள்-உலகம். நால்நிலம்-பரந்தநிலம். நால்-நால்கு-நான்கு.

ஐந்து: கை-(ஐ)-ஐது-ஐந்து. கையிலுள்ள விரலெண்ணிக்கை காண்க.

ஆறு: வழி, நெறி. (ஐந்திணைச் சிறுதெய்வ வணக்கமும், கடவுள் வழிபாடும் ஆகிய அறுவகை ஆறு)

ஏழு: எழு-எழுவு. எழுவுதல்-இசைக்கருவியினின்று ஒலிஎழச் செய்தல். அவ்வாறெழுகின்ற இன்னிசை ஏழாதலின், அவ்வெண்ணிக்கை ஏழு என்ற எண்ணைத் தோற்றுவித்தது.

எட்டு: எண்-வரையறை. எல்லை. எண்-எட்டு, எட்டுத்திசைகளின் எண்ணிக்கையினின்று வந்தது.

தொண்டு: தொள்-தொண்டு-தொளை. மாந்தன் உடம்பில் உள்ள ஒன்பது தொளைகளினின்று தோன்றிய சொல். ஒன்பது என்பது திரிபுச்சொல். தொண்டு என்பதே ஒன்பதைக் குறிக்கும் பழஞ்சொல்.

பத்து: பல்-பல.-பல்-பது-பத்து.

நூறு: நுறு-நூறு-பொடி. நுறு-நுறுங்கு-பொடிசெய்தல்.

ஆயிரம்: அயிர்-நுண்மணல். அயிர்-அயிரம்-ஆயிரம். மணல் தொகை ஏராளமாயிருப்பதால் மணற்பெயர் ஒரு பெருந்தொகைப் பெயராயிற்று.

இலக்கம்: இலக்கு-குறி. இலக்கம்-எண்குறி-எண்-பேரெண்.

கோடி: குடு-குடுமி-உச்சி; கொடுமுடி-மலையுச்சி, கொடு-கோடி-நுனி. எல்லை.

(தமிழ் வரலாறு—பாவாணர்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.